2009 பிப்ரவரி 19]

27—

இரப்பர் கழகம்

***7150—திருமதி ரா. லீமா ரோஸ்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அரசு இரப்பர் கழகத்தினை வர்த்தக முறையில் இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். அரசு இரப்பர் கழகம் முற்றிலும் அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு, 1-10-1984 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது 4,279.78 ஹெக்டேர் பரப்பளவில் பால் வடிப்பு செய்வதற்குத் தகுதியான, சுமார் 5,91,133 மரங்களில் 1,818 தொழிலாளர்களால் பால் வடிப்பு செய்யப்பட்டு, அந்த இரப்பர் பொருள்கள் உற்பத்தி ஆவதற்குத் தகுதியான மூலப்பொருட்கள் உற்பத்தி செய்கின்ற ஒரு வர்த்தக நிறுவனமாக இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா ரோஸ்.

முற்பகல் 9-50

திருமதி ரா. லீமா ரோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், அரசு இரப்பர் கழகம் வர்த்தக முறையில் இயங்கி வருகிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கின்றார்கள். மூலப்பொருளான இரப்பரைப் பயன்படுத்தி இரப்பர் ஆலை அமைக்கப்படுவதால், அதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் டயர், டியூப்களை அரசுத் துறை வாகனங்களுக்குப் பயன்படுத்தும் முறையில் விரிவுபடுத்தினால் கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகளும் நிறைவேறும். வெளி மாநிலங்களிலிருந்து இரப்பரைப் பெற்று நல்லமுறையில் செயல்பட வைக்க முடியும். இப்போது அங்கிருக்கின்ற தொழிலாளர்கள் பயன்பெறக்கூடிய முறையில் குறிப்பாக, Employment Exchange

[2009 பிப்ரவரி 19

மூலமாகப் பணியாளர்களை வேலைக்கு அமர்த்தி அதன்பிறகு பயிற்சி கொடுப்பதன்மூலமாக—எந்த நோக்கத்திற்காக அங்கே இந்த நிறுவனம் தொடங்கப்பட்டதோ,—அந்த நிறுவனம் என்பது முழுமையாக அந்தப் பகுதி மக்கள் பயன்பெற முடியாத நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, தொழிலாளர்களுடைய இன்றைய நிலையைக் கவனத்தில்கொண்டு அங்கிருக்கக்கூடிய இரப்பரை அபிவிருத்தி செய்யக்கூடிய முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும். தொழிற்கூடத்திற்கு ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழ் பெற்றுள்ளது போன்று, இரப்பர் பகுதிகளுக்கும் ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழ் பெறும் நோக்கம் உண்டா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அத்துடன் தொழிலாளர் நலன்களும் பேணப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): தலைவர் அவர்களே, இரப்பர் பற்றிய கேள்வி; இரப்பரைப் போல இழுக்கலாமா? *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களுக்காக அரசு இரப்பர் கழகம் உருவாக்கப்பட்டு அதனுடைய பணியைச் செய்து வருகிறது. அரசு, வனத் துறையினுடைய நிலத்திலிருந்து, 4,279.78 ஹெக்டேர் நிலத்தைக் குத்தகைக்குப் பெற்று அதைச் செயல்படுத்தி வருகிறது. அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்குரிய அனைத்து வசதிகளையும் நாங்கள் செய்து கொடுத்திருக்கிறோம். அங்கே வாடகையில்லா குடியிருப்புகள், குழந்தைகள் காப்பகம், குழந்தைகளுக்கு இலவசக் கல்வி, மருத்துவ வசதி, ஆண்டுதோறும் ஒரு குடை, ஒரு போர்வை என்று அவர்களுக்கு தந்துகொண்டிருக்கிறோம். இலங்கையிலிருந்து குடிபெயர்ந்த தமிழர்களின், 379 குடும்பங்களை அங்கே வேலையிலே அமர்த்தியிருக்கிறோம். இப்படி அவர்களுடைய நலன் காப்பதிலே முழுமையாக இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதிதாக இரப்பர் தொழிற்சாலை அமைப்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பால் வடிப்பு செய்து, அதிலிருந்து வருகின்ற, இரப்பருக்கான மூலப்பொருளை உற்பத்தி

2009 பிப்ரவரி 19]

செய்கின்ற அளவிற்குத்தான் அங்கு அந்த வசதிகள் இருக்கின்றன. ஏற்கெனவே அந்தக் கழகம் இழப்பிலே, அதாவது நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருந்ததை, 2006 வரை 23 கோடியே 49 இலட்சம் நஷ்டத்தில் இருந்ததை, 2006-2007-லே 5 கோடியே 43 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் இலாபமாகவும், 2007-2008-லே ஒரு கோடியே 54 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் இலாபமாகவும் நாங்கள் இயக்கி, இந்த ஆண்டுகூட தோராயமாக 2 கோடி ரூபாய் இலாபம் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது குவிந்த நஷ்டத்தை ரூபாய் 11 கோடியே 28 இலட்சத்து 28 ஆயிரமாகக் குறைத்திருக்கிறோம். அரசு இரப்பர் கழகம் இலாபத்திலே இயங்குகின்ற நிலை வரும்போது, புதிதாக தொழிற்சாலை அமைத்து அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு மேலும் வேலைவாய்ப்பைத் தருவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் பதிலுக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன். அதேநேரத்தில் அகதிகள், மறுவாழ்வுத் தொழிலாளர்கள் மேம்பாட்டுக்காக, Rehabilitation Plantation கேரள மாநிலம், புனலூரில் செயல்படுகிறது; ஓரளவு அந்த நிறுவனத்தைப் போன்று, அந்தச் செயல்பாட்டைத் தமிழகத்தில் கொண்டுவர தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா? மேலும், உற்பத்திப் பிரிவு 14 வருடங்களாக மூடியதை மறுதிறப்பு செய்யும்படியான நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. 16-2-2009 முதல் முறையான வேலையை நிர்வாகம் வழங்கவில்லை. கடந்த நான்கு நாட்களாக 120 தொழிலாளர்கள் வேலையின்றி உள்ளனர். அரசின் கவனத்திற்கு இது வரப்பெற்றதா? அந்தத் தொழிலாளர்களின் வேலைக்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், இப்போது 16-2-2009-லிருந்து வேலை

இல்லை என்று குறிப்பிடுகிறார்கள். இதுவரை அவர்களுக்கு எல்லா நாட்களும் வேலை கொடுத்துக் கொண்டுதான் வருகிறோம். அவர், Rehabilitation Plantation என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்த மரங்களை எல்லாம் மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்ற சூழ்நிலையில்தான் சென்ற ஆண்டு *125* ஹெக்டேர் நிலத்தில்—ஏனென்று கேட்டால், ஒரு மரத்தில் *7* ஆண்டுகளுக்குப் பிறகுதான் பால் வடிய ஆரம்பிக்கின்றது. *8* முதல் *35* ஆண்டுகள் வரைதான் பால் தரும். அதன்பிறகு பால் உற்பத்தி குறைந்துவிடுகின்றது. இப்பொழுது அந்த மரங்களிலெல்லாம் பால் உற்பத்தி மிகவும் குறைந்திருக்கிறது. சில இடங்களிலே மரங்கள் முழுவதுமாகப் பட்டுப்போயும் இருக்கின்றன. எனவே, அவற்றுக்கு மாற்றாக சென்ற ஆண்டு *125* ஹெக்டேர் பரப்பளவிலே புதிய மரங்களை நடுவதற்குத் திட்டங்கள் தயார் செய்து, அவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, வருங்காலங்களிலே அங்குள்ள மரங்களெல்லாம் மாற்றப்பட்டு, அதிகமாக பால் வடிகின்ற நிலை வருமேயானால், இன்னும் அதிக அளவில் தொழிலாளர்களை அங்கே நாங்கள் வேலைக்கு அமர்த்துவோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர்கள் யாராவது வேலையில்லாமல் இருந்தால், அவர்களுக்கெல்லாம் இந்த அரசு உரிய நிவாரணம் வழங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *9-55*

மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் வரலாறு காணாத அளவிற்குப் பால் வடிக்கின்ற தொழிலாளர்கள் *1,342* பேருக்கு *144* ரூபாய் *80* காசும், களப் பணியாளர்களான பாதுகாப்புப் பணியாளர்கள் *354* பேருக்கு *137* ரூபாய் *15* காசும், அங்கிருக்கின்ற தொழிற்கூடங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் *90* பேருக்கு *142* ரூபாய் *15* காசும் தினக்கூலி தந்துகொண்டிருக்கிறோம். இது மாண்புமிகு உறுப்பினருக்கும் தெரியும். எனவே, வரலாறு காணாத அளவிற்குக் கூலி நிர்ணயம் செய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களுக்குத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *28*, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.